
# மிருக சிருஷம் நக்ஷத்ரம் (ஆத்ம லிங்கம்)



**1. கணபதி வழிபாடு**

பரசிவம், சின்மயம், பூரணம்,

சிவபோகபாக்யம் பரமநிதியம்

**2. திருவருட்பாவில் சிவ மிருகசிருஷ சக்தி**

பரிசயாதீதம், சுயம்சதோதயம், வரம்,

பரமார்த்தமுக்தமௌனம்

**3. திருப்பாவைபாசுரம் – 23 மிருகசிருஷம் இயல்பு**

மாரி மலைமுழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்

சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து

வேரி மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்துதறி

மூரி நிமிர்ந்து முழங்கி புறப்பட்டுப்

போதருமா போலநீ பூவைப்பூ வண்ணா உன்

கோயில்நின்று இங்ஙனே போந்தருளிக் கோப்புடைய

சீரிய சிங்கா சனத்து இருந்து யாம்வந்த

காரியம் ஆராய்ந் தருளேலோ ரெம்பாவாய்.

**Video Link : https://youtu.be/gQmzSAe_nO8**

**விளக்கம் :**

சீரிய சிங்காசனத்திலிருந்து வரம் அளிக்கும் மிருக சீரிஷமேயாம் வந்த காரியம் ஆராய்ந்து அருள உமக்கே தகுதியாகும். இங்கே சீரிய சிங்காசனம், திரு வேங்கடவன் இதயக் கமலமே ஆகும். இந்த இதயக் கமலத்திலிருக்கும் மிருக சீரிடம் நக்ஷத்ரக்காரர்கள் கலியுகத்தில் வரம் பெற்றவர்களாவர்கள்.

இவர்களுடைய அனுதின ஆராய்ச்சிகள் நேர் நோக்கமாய் அமைந்து அரசனையும், எதிர்த்து கேள்வி கேட்கச் செய்யும்.

வரமாய் பெற்ற பல்கி, பெருகிய, சுகங்கள் அனைத்தும் இவரை தானாகவே நாடியும், தேடியும் வரும். அதே நேரத்தில் சுயஞ்ஜோதிமயமாக, அதாவது சுயமாக, அதாவது எந்த சிபாரிசுகளும் இல்லை, சுயமாக புறப்படுவதை பாசுரத்தில் இவ்வாறு காண்கிறோம்.

" சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீ விழித்து வேரிமயிர்ப் பொங்க பாடுகள் பலபட்டு ஊறி நிமிர்ந்து வணங்காமுடியாய், முழங்கி புறப்படுதலேயாகும். "

எனவே காட்டிலுள்ள சிங்கத்திற்கு சிபாரிசு இல்லை. உறக்கத்தில் இருக்கக் கூடாது என்பதே நிபந்தனை.

பரிச்சயங்கள் வியத்தகு விளைவுகளை போதருமா போல பூவைப் பூவண்ணமாக வழங்க, வளர, வசிக்க அற்புதங்களை மிருகசீரிடம் அனுபவிக்கும். எனவே மனித நேயம் மலர மிருக குணம் மறைந்து மனிதன் தெய்வமாகும்.

சீரிய சிங்காசனம் மிருகசீரிட நக்ஷத்ரத்திற்கு வரமாக தேடிவரும். பதவி, பதவி என அலையமாட்டீர்கள். சுயமான உழைப்பின் காரணமாக எந்த விதமான பரிந்துரையும் இல்லாமல் காட்டு ராஜாவாக சிங்கம் திகழ்வது போல நாட்டிலும், நகரத்திலும், ஊரிலும், வீட்டிலும் ராஜாவாக உயர் பதவியில் நிர்வாகம் செய்வீர்கள்.

இந்த சீரும் சிங்கம் அறிவுறுத்தீ விழித்து வேரிமயிர், பொங்க எப்பாடும் பேர்ந்தறி, மூரி நிமிர்ந்து, முழங்கிப் புறப்பட்டு, கேட்கும் கேள்விகள் தவிர்க்க முடியாததாகும். எனவே கேள்விகள் கேட்கவில்லை என்றால், இந்த சிங்கத்தின் தலை சிதறிவிடும். ஆனாலும் பார்ப்பதற்கு போதருமான போலே,

நீ பூவைப் பூவண்ணன் போல் பரமார்ந்த முக்த மௌனம் போல காட்சியளிப்பார்.

நீவீர் உமது இடம் விட்டு எம்மிடம் பரிச்சயப்பட்டு அழகு மிக்க அரியணையில் அமர்ந்து எதை நாடி ஓங்கி நிற்கிறோம், என்று ஆராய்ந்து ஆராய்ச்சியின் உச்சிக்கு சென்று உலகியல் உதவிகளை செய்பவர் நீங்கள். எனவே சிறந்த நேர்மையாளன், மிகுந்த உழைப்பாளன், பரந்த நீதிமான். மிருகசீரிடமே வருக மிருக சீரிடமே அருள்க!

## 4. வேதத்தில் மிருகசிருஷம் ஜோதிசக்தி

ஓம் பூர் புவ ஸ்வஹ **(மெட்டு)**

சசிசேகராய வித்மஹே

மஹாராஜாய தீமஹி

ப்ரஜா எஜமான தீமஹி

மிருகசீரிஷா ப்ரசோதயாத்;

அற்புதமான ஆய்வு நிலை

விற்பனர் தம் துணையாகும்

பரிச்சயம் கொண்ட அன்பருக்கு

பரிசாய் அமைந்தது உந்தன் துணை

உழைப்பவர் உயர்வார் என்றபடி

உலகோர் யார்க்கும் உந்தன்வழி

வரமே தரும் நல் வழக்கப்படி

வாழ்வில் உயர்வார் நமோ நமோ;

ஓம் சிவாய மே நம சிவாய மே

த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்

## 5. மிருகசீரிடம் கவிதை

விளக்கெலாம் விளக்கல்ல; பொய்யா விளக்கே!

சுயம் எல்லாம் சுயமல்ல; சுயம்பான உதயமே!

வரம் எல்லாம் வரமல்ல; இயற்கை வரமே!

பரிச்சயமெலாம் தீட்சையல்ல; அதீதமான பார்வையே!

ஆத்மார்த்த அணுகுமுறைகள் ஆயிரமுண்டு

ஆனால் பரமார்த்த அணுகுமுறை நினதே!

அறிவார்ந்த செயல்முறைகள் அனேகமுண்டு

ஆனால் வினைமான, கூர்மைகள் நினதே!

மனங்களின் மாயைகளில் மந்திரமுண்டு

ஆனால் மனமறிந்து, பணமறிந்து, முடிந்த முடிவே!

வார்ப்புகளில் வளைவிருந்தாலும் வரமாக திகழ்பவளே!

தாக்கமே தந்து தளர்வறிந்தாலும்

பொறுமையிலும் கூட்டணி இருந்தாலும்

சின்னசின்ன சினுங்கல் இடைவரினும்

மௌனமே நிரந்தர வெற்றி என வெல்பவள் நீ!

வைர நெஞ்சம் வையகத்தின் எல்லா நலங்கட்காகவே!

வைர நகைகள் வைப்பெல்லாம் தான தர்மம் காக்கவே!

வைர வரிகள் வார்ப்பதெல்லாம் மெய்யான மனங்காக்கவே!

வைர இருப்பு முக்தியென்றால் மௌனமான வெற்றிக்காகவே!

## 6. அபிராமி அந்தாதியில் மிருகசிருஷம் சக்தி

**கன்னிகைகளுக்கு நல்ல வரன் அமைய**

அதிசயமான வடிவுடையாள், அரவிந்தமெல்லாம்

துதிசய ஆனன சுந்தரவல்லி, துணைஇரதி

பதிசயமானது அபசயம் ஆக முன் பார்த்தவர் தம்

மதிசயமாக அன்றோ வாமபாகத்தை வவ்வியதே.

**மரண பயம் நீங்க**

வவ்விய பாகத்து இறைவரும், நீயும் மகிழ்ந்திருக்கும்

செவ்வியும், உங்கள் திருமணக்கோலமும் சிந்தையுள்ளே

அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற்பாதமும் ஆகிவந்து

வெவ்விய காலன் என்மேல்வரும் போது வெளிநிற்கவே.

**பேரின்ப நிலையடைய**

வெளிநின்ற நின் திருமேனியைப்பார்த்தேன் விழியும் நெஞ்சும்,

களிநின்ற வெள்ளம் கரை கண்டதில்லை; கருத்தினுள்ளே

தெளிநின்ற ஞானம் திகழ்கின்றது என்ன திருவுளமோ?

ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே.

**வீடு வாசல் முதலிய செல்வங்கள் உண்டாக**

உறைகின்ற நின் திருக்கோயிலில் நின்கேள்வர் ஒருபக்கமோ?

அறைகின்ற நான்மறையின் அடியோ? முடியோ? அமுதம்

நிறைகின்ற வெண்திங்களோ? கஞ்சமோ? எந்தன் நெஞ்சமோ?

மறைகின்ற வாரிதியோ? பூரணாசல மங்கலையே.

**Video Link : https://youtu.be/iVb8ulEiZMg**

## 7. விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் மிருகசிருஷம் சக்தி ஓம்... ஓம்... ஓம்...

| | |
|---|---|
| ஓம் உபேந்த்ராய நம | – இந்திரனின் இளவலே போற்றி |
| ஓம் வாமநாய நம | – வாமனனே போற்றி |
| ஓம் ப்ராம்ஸவே நம | – உயர்ந்தவனே போற்றி |
| ஓம் அமோகாய நம | – சுயமான சுடரே போற்றி |
| ஓம் ஸுசயே நம | – புடம்போட்ட தங்கமே போற்றி |
| ஓம் ஊர்ஜிதாய நம | – அளவிலா ஆற்றலே போற்றி |
| ஓம் அதீந்த்ராய நம | – ஆதி இந்திரனே போற்றி |
| ஓம் ஸங்க்ரஹாய நம | – பிரபஞ்சத்தின் துணைக்கோளே போற்றி |
| ஓம் ஸர்காய நம | – ஆக்கலின் ஆகர்ஷணமே போற்றி |
| ஓம் த்ருதாத்மநே நம | – பிறப்பிற்கப்பாற்பட்ட மாற்றமில்லா இயற்கையே போற்றி |
| ஓம் நியமாய நம | – நியமங்களின் நிர்ணயமே போற்றி |
| ஓம் யமாய நம | – மற்றைவகளின் முடிவுரையே போற்றி |
| ஓம் வேத்யாய நம | – மோட்சத்தின் விழிப்புணர்வே போற்றி |
| ஓம் வைத்யாய நம | – அறிவுகளின் கலைகளே போற்றி |
| ஓம் ஸதாயோகிநே நம | – அனுபவத்தின் அநுபூதியே போற்றி |
| ஓம் வீரக்நே நம | – அசுரர்களை வென்ற வீரனே போற்றி |
| ஓம் மாதவாய நம | – மாதவனே போற்றி |
| ஓம் மதவே நம | – தேனினும் இனிக்கும் சுவையே போற்றி |
| ஓம் அதீந்த்ரியாய நம | – இந்திரியங்கள் அறியாத உணர்வே போற்றி |
| ஓம் மஹாமாயாய நம | – மகா மாயையே போற்றி |
| ஓம் மஹோத்ஸாஹாய நம | – மகா ஆக்கமே போற்றி |
| ஓம் மஹாபலாய நம | – மகா பலமே போற்றி |
| ஓம் மஹாபுத்தாய நம | – மகா ஞானமே போற்றி |
| ஓம் மஹாவீராய நம | – மகா வீர்யமே போற்றி |
| ஓம் மஹாஸக்தயே நம | – மகா சக்தியே போற்றி |
| ஓம் மஹாத்யுதயே நம | – மகா உள்வெளியுக்தியே போற்றி |

ஓம் அநிர்தேஸ்யவபுஷே நம – புலப்படாத புண்ணிய பொருளே போற்றி

ஓம் ஶ்ரீமதே நம – சிறப்பின் சிறப்பே போற்றி

ஓம் அமேயாத்மநே நம – அளவிட முடியாத நுண்ணறிவே போற்றி

ஓம் மஹாத்ரி த்ருஷே நம – அதிசய மலைகளை தாங்கி பிடிப்பவனே போற்றி

ஓம் மஹேஸ்வாஸாய நம – வில்லாதி வில்லாளனே போற்றி

ஓம் மஹீபர்த்ரே நம – பிரளய கால உலகை காப்பவனே போற்றி

ஓம் ஶ்ரீநிவாஸாய நம – ஶ்ரீநிவாசனே போற்றி

ஓம் ஸதாங்கதயே நம – புனித மாபெரும் புனிதமே போற்றி

ஓம் அநிருத்தாய நம – தடையிலா தன்நிகரே போற்றி

ஓம் ஸுராநந்தாய நம – ஆனந்த ஸ்வரமே போற்றி

ஓம் கோவிந்தாய நம – விந்தை கோவிந்தமே போற்றி

ஓம் கோவிந்தாம்பதயே நம – வார்த்தைகளின் வித்தையே போற்றி

## 8.லலிதா ஸஹஸ்ரநாமத்தில் மிருகசிருஷம் சக்தி

ஸம்பத்கரீ – ஸமாரூட – ஸிந்துர – வ்ரஜ – ஸேவிதா
அஸ்வாரூடாதிஷ்டிதாச்வ – கோடி – கோடிபி – ராவ்ருதா

சக்ரராஜ – ரதாரூட ஸர்வாயுதபரிஷ்க்ருதா
கேயசக்ரரதாரூட மந்த்ரிணீ பரிஸேவிதா

கிரிசக்ரரதாரூதண்டநாதா புரஸ்க்ருதா
ஜ்வாலாமாலிநிகாக்ஷிப்தவஹ்நி ப்ராகாரமத்யகா

பண்டஸைன்யவதோத்யுக்தசக்தி விக்ரமஹர்ஷிதா
நித்யாபராக்ரமாடோப நிரீக்ஷண ஸமுத்ஸுகா

பண்டபுத்ரவதோத்யுக்தபாலா விக்ரமநந்திதா
மந்த்ரிண்யம்ப விரசித விஷங்க வத தோஷிதா

விசுக்ரப்ராணஹரணவாராஹீவீர்யநந்திதா
காமேச்வரமுகாலோககல்பிதஶ்ரீகணேச்வரா

**Video Link : https://youtu.be/DtSBLpQStT4**

## ௯. கந்தகுரு கவசகத்தில் மிருகசிருஷம் சக்தி

சதுர்மறை போற்றும் ஷண்முக நாதா

ஆகமம் ஏத்தும் அம்பிகைப் புதல்வா

ஏழையைக் காக்க நீ வேலேந்தி வந்திடுவாய்

தாயாய்த் தந்தையாய் முருகா தக்கணம் நீ வருவாய்

சக்தியும் சிவனுமாய்ச் சடுதியில் நீ வருவாய்

பரம்பொருளான பாலனே ஸ்கந்தகுரோ

ஆதிமூலமே அருவாய் உருவாய் நீ

அடியனைக் காத்திட அறிவாய் வந்தருள்வாய்

உள்ளொளியாய் முருகா உடனே நீ வா வா வா

தேவாதி தேவா சிவகுரோ வா வா வா

வேலாயுதத்துடன் குமரா விரைவில் நீ வந்திடப்பா

காண்பன யாவுமாய்க் கண்கண்ட தெய்வமாய்

வேதச் சுடரோய் மெய்க்கண்ட தெய்வமே

மித்தையாம் இவ்வுலகை வித்தையென்று அறிந்திடச்செய்

அபயம் அபயம் ஸ்கந்தா அபயமென்று அலறுகிறேன்

அமைதியை வேண்டி அறுமுகா வாவென்றேன்

உன்துணை வேண்டினேன் உமையவள் குமரா கேள்

அச்சம் அகற்றிடுவாய் அமைதியைத் தந்திடுவாய்

வேண்டியது உன்னருளே அருள்வது உன் கடனேயாம்

உன் அருளாலே உன்தாள் வணங்கிட்டேன்

அஷ்டமா ஸித்திகளை அடியனுக்கு அருளிடப்பா

அஜபை வழியிலே அசையாமல் இருத்திவிடு

சித்தர்கள் போற்றிடும் ஞானசித்தியும் தந்துவிடு

சிவானந்தத் தேனில் திளைத்திடவே செய்துவிடு

அருள் ஒளிக் காட்சியை அகத்துள்ளே காட்டிவிடு

அறிவை அறிந்திடும் அவ்வருளை நீ தந்துவிடு

அனுக்கிரகித்திடுவாய் ஆதிகுருநாதா கேள்

ஸ்கந்தகுரு நாதா ஸ்கந்தகுரு நாதா

தத்துவம் மறந்து தன்னையும் நான் மறந்து

நல்லதும் கெட்டதும் நான் என்பதும் மறந்து

பாவ புண்ணியத்தோடு பரலோகம் மறந்திடச்செய்

அருள் வெளிவிட்டு இவனை அகலாது இருத்திடுவாய்

அடிமையைக் காத்திடுவாய் ஆறுமுகக் ஸ்கந்தகுரோ

சித்தியிலே பெரிய ஞானசித்தி நீ அருள

சீக்கிரமே வருவாய் சிவானந்தம் தருவாய்

சிவானந்தம் தந்தருளி சிவசித்தர் ஆக்கிடுவாய்

சிவனைப் போல் என்னைச் செய்திடுவது உன் கடனே

சிவசத் குருநாதா சிவசத் குருநாதா

**Video Link : https://youtu.be/fO7MD2St1iU**

## 10. கந்தர் அநுபூதி மிருகசிருஷம் சக்தி

மட்டூர் குழல் மங்கையர் மையல் வலைப்

பட்டு, ஊசல்படும் பரிசு என்று ஒழிவேன்?

தட்டு ஊடு அற வேல் சயிலத்து எறியும்

நிட்டூர நிராகுல, நிர்பயனே.(9)

கார் மா மிசை காலன் வரில், கலபத்

தேர்மா மிசை வந்து, எதிரப் படுவாய்

தார் மார்ப, வலாரி தலாரி எனும்

சூர்மா மடியத் தொடுவே லவனே.(10)

**Video Link : https://youtu.be/x9sjGNdLHkw**

## 11. ராகங்களில் மிருகசிருஷம் சக்தி

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| ரூபாவதி | ரூபாவதி | காயகப்பிரியா | வகுளா பரணம் |

## 12. மூலமந்திரம்

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம்ஜம்மகாலஷ்ம்யை

கமலதாரிண்யை ஸிம்ஹ வாஹன்யை நம:

## 13. விருட்ச சக்தி பெற நட வேண்டிய மரம்

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| கருங்காலி | அச்சா | வேப்ப | நீர்கடம்பு |

## 14. பரிகாரம்

- நெய்தானம் செய்யவும்.
- வஸ்த்தரதானம் செய்யவும்.
- குறைந்தபட்சம் 7 நபர்களுக்கு உதவிடுக.
- உங்கள் வழிபாட்டிற்கு ஏற்றபடி மந்திரங்களை பாராயணம் செய்யவும்.
- கோவிலுக்கு சென்று சுவாமியை தரிசிக்கவும்.

- 2x2 கண்ணாடி வைத்து உங்கள் முகத்தை பார்த்து தியானம் செய்யவும். (ஆடி தியானம்).
- நட்சத்திர கோயில் **அருள்மிகு ஆதிநாராயணப்பெருமாள் திருக்கோயில்,** எண்கண் - திருவாரூர்.


**Aathma Trust (ஆத்ம லிங்கம்)**

Regd No: 96/19

33.கோசாலை, கிரிவலம்,

திருவண்ணாமலை - 600 501.

**Website :** www.aathmanakshtra.org

www.yaasha.in

**Email :** jhohumm@gmail.com

**Youtube :** aathmanakshatra